269

திப்பக வெளியீடு

269

நான்மணிக்கடிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUN 1944
MADRAS

PREMIER

சக்தி காரியாலயம்
மதுரை —— சென்னை

தமிழ்ப் பதிப்பக வெளியீடு க.

விளம்பி நாகனர்

இயற்றிய

நான்மணிக் கடிகை

894·8111

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 JUN 1944
MADRAS

பதிப்பாசிரியர் :

ராவ்சாகிப்

ச. வையாபுரிப் பிள்ளை

சக்தி காரியாலயம்

சென்னை : : மதுரை

முதற்பதிப்பு மார்ச் 1944

உரிமை பதிவு
செய்யப்பெற்றது

031,1

விலை ரூபாய்
ஒன்றே கால்

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ் ஜி. டி., சென்னை.

பதிப்புரை

இதுவரை ஏட்டுச் சுவடிகளிலிருந்து வெளிவராத நூல்களை யும், திருந்திய முறையில் அச்சிடப்படாத நூல்களையும், முன் அச் சிட்டும் தற்போது பிரதிகள் கிடைக்காத நூல்களையும் வெளி யிடத் தமிழ்ப்பதிப்பகம் முயற்சிசெய்கிறது. ஆராய்ச்சியாளர்கள் பொதுமக்கள் மாணவர்கள் முதலிய அனைவர்க்கும் பயன்படும் முறையில் இப்பதிப்புக்கள் வெளியிடப்படுகின்றன. முதலில் பதி னெண் கீழ்க்கணக்கு நூல்களை வெளியிடத் தீர்மானித்திருக் கிறோம். அவற்றில் முதலில் வெளிவருவது நான்மணிக்கடிகை.

இப்பதிப்பைச் சிறந்த முறையில் பலவகை அகராதி, குறிப் புக்கள் முதலியவற்றுடன் எல்லோருக்கும் பயன்படும்படி சென் னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத் தலைவர் ராவ் சாஹெப் திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதிப்பித்து உதவியுள்ளார்கள். பல்கலைக் கழகத்து மாணவர் திரு. மு. சண் முகம் பிள்ளை இம்முயற்சியில் பெரிதும் உழைத்துள்ளார்கள். இந்நூலை சக்தி காரியாலயத்தார் அழகுற அச்சியற்றி வெளியிட்டுத் தந்துள்ளார்கள். இவர்கள் யாவர்க்கும் எங்களது நன்றி உரிய தாகுக.

மயிலாப்பூர்
7—2—44

கா. இராமநாதன் செட்டியார்
தி. கி. நாராயணசாமி நாயுடு

காரியதரிசிகள், தமிழ்ப்பதிப்பகம்.

உள்ளுறை

முன்னுரை	... 7 - 15
ஒப்பு நோக்கிய அச்சுப் புஸ்தகங்கள்	... 16
ஒப்பு நோக்கிய ஏட்டுப் பிரதிகள்	... 16
நூல்	... க - ௧௬
செய்யுள் முதற் குறிப்பு	... ௧௭ - ௧௮
நூற் பொருள்	... ௧௯ - ௫௨
சொல் - தொடர் அகராதி	... ௫௩ - ௬௯
அருஞ்சொற் பொருள்	... ௭௰ - ௭௩
விளக்கக் குறிப்பு	... ௭௪ - ௭௭
பாட பேதங்கள்	... ௭௮
பிழை திருத்தம்	... ௭௮

முன்னுரை

நமது மாணவச் சிறுவர்கள் இளமையில் ஓதிவரும் நூல்களில் ஒன்று நான்மணிக்கடிகை. ஆனால் ஒழுக்க நெறியைப்பற்றிக் கூறுவதால், இந்நூல் அவர்களுக்கு மட்டும் உரியதென்று கொள்ளக்கூடாது. சிறுவர் பெரியோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் இதனைக் கற்றுப் பயன்பெறுதற்கு உரியர்.

இது 'கடைச் சங்கம் மரீஇய நூல்களுள் ஒன்று' என்று சொல்லுவர். சங்க நூல்களை இந்நூல் எடுத்தாளுகிறது.

தாயுடன்று அலைக்குங் காலையும் வாய்விட்டு
அன்னாய் என்னும் குழவி (குறுந் - 397)

என்பது

குழவி அலைப்பினும் அன்னே என்று ஓடும் (25)

என்பதன் மூலமாகும். வள்ளுவர் திருக்குறளை ஒரு சில இடங்களில் பின்பற்றுகிறது. உதாரணமாக

இன்மையின் இன்னாதது இல்லை இலம் என்னும்
வன்மையின் வன்பாட்டது இல் (31)

என்ற செய்யுள்

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது (1041)

என்ற திருக்குறளையும்

இன்மை யிடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்டது இல் (1063)

என்ற திருக்குறளையும் உட்கொண்டது.

யாதொன்றும் பேணாமை பேதை தொழில் (குறள் - 883)

என்ற திருக்குறள்

பேணாமை செய்வது பேதைமை (24)

என்பதற்கு ஆகரம்.

> வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
> கோனோக்கி வாழுங் குடி (குறள் - 542)

என்பது

> கோனோக்கி வாழுங் குடி (28)

என்று தொடங்குஞ் செய்யுட்கு ஆதாரம்.

ஆகவே இந்நூல் சங்க நூல்களுக்கும் திருக்குறளுக்கும் பிற்பட்டதென்பது நிச்சயம். சேனபதி (54), காங்கி (61), அசனம் (81), ஆசாரம் (95) முதலிய வடசொற்களும், நாக்கு (77) முதலிய சொல் வடிவங்களும், சோவின் அருமை என்ற இடத்துப்போல ஆறும் வேற்றுமையில் வரும் 'இன்' உருபும், வீழ்வானேல் (74) என்பதிற்போல 'எல்' என்னும் எச்ச ஈறும் இந்நூல் பிற்காலத்ததென்பதை உணர்த்துகின்றன. 'எஞ்சாமை' (27) முதலிய இடங்களிற்போல, எதிர்மறைத் தொழிற் பெயர் எதிர்மறை யேவற்பொருளில் வரும் வழக்கும் இத்துணிபினையே வற்புறுத்துகிறது. எனினும் சிலப்பதிகாரத்திலே (வழக்குரை காதை, இறுதி வெண்பா)

> அல்லவை செய்வார்க்கு அறம்கூற்ற மாமென்னும்
> பல்லவையோர் சொல்லும் பழுதன்றே

என இந்நூற் செய்யுள் (84) எடுத்தாளப்பட்டிருக்கிறது. இதனால் இந்நூல் அக்காப்பியத்திற்கு முற்பட்டதென்பது விளங்கும். இது தோன்றிச் சுமார் 1300-ஆண்டுகள் ஆயிருக்கலாம்.

நான்மணிக்கடிகையை இயற்றிய ஆசிரியர் பெயர் விளம்பி நாகனர் என்பது. இது சங்க காலப் புலவர்களுடைய பெயர் வரிசையிற் காணாதது கவனித்தற்குரியது. திருவள்ளுவமாலைப் புலவர்களின் பெயர் வரிசையிலும் இது காணப்படவில்லை.

இந்நூலில் வரும் பொருளமைதியும் கருத்துக்கள் எடுத்துள்ள சொல்வடிவும் மிகவும் சிறந்தனவாயுள்ளன. ஒவ்வொரு தொடரும் மாசு நீக்கி நன்றுக இழைக்கப் பெற்ற மணிபோல விளங்குகிறது. இதுபற்றியே நான் மணிக்கடிகை என இந்நூல் பெயரிடப்பட்டுள்ளது. கடிகை என்பதற்குத் துண்டம் என்பது பொருள். ஒவ்வொரு செய்யுளிலும் நந்நான்கு அழகிய கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. திருக்குறள், திரிகடுகம், நாலடி, நான் மணிக்கடிகை இந்நான்கும் மிகச் சிறந்து விளங்கும் அரிய தமிழ்க் கருவூலமாகும்.

இந்த அரிய நூல் முதன்முதல் சுமார் 100-ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்டது. பின் பலரும் வெளியிட்டிருக்கிருர்கள். பதிப்புக்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஏடுகளைப் பரிசோதித்து வெளியிட்ட பதிப்பு ஒரு வகை. முன் பதிப்புக்களை மாத்திரம் நோக்கி அப்படியே வெளியிட்டது பிறிதொரு வகை. இவற்றுள், இரண்டாவது வகையைக் குறித்து யாதும் சொல்லவேண்டியதில்லை முதலாவது வகைதான் கவனித்தற்குரியது. இவ்வகையில் ஸேது ஸம்ஸ்தான மஹா வித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்கார் அவர்கள் செந்தமிழ்ப் பிரசுரமாக மதுரைத் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளியிட்ட பதிப்பே மிகச் சிறந்து விளங்குகிறது. அவர்களுக்கும் அவர்களைப்போன்று பதிப்பு முயற்சியில் தலைப்பட்டுள்ள அனைவர்க்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம்.

இவ்வகைப் பதிப்புக்களிலும் திருந்தவேண்டிய இடங்கள் சிலவுள்ளன. அவற்றுள் ஒன்று காட்ட விரும்புகிறேன்.

ஒன்றூக்கல் பெண்டிர் தொழில்நலம் என்றும்
நன்றூக்கல் அந்தண ருள்ளம் பிறன் ஆளும்
நாடுக்கல் மன்னர் தொழில்நலம் கேடுக்கல்
கேளிர் ஒரீஇ விடல் (86)

என்று ஒரு சிறந்த பதிப்பிலே பாடம் காணப்படுகிறது. இங்கே 'நன்றாக்கல்' என்பதில் எதுகை நயம் இருக்கிறது. ஆனல், முந்தியசீர் மாச்சீராக இருத்தலால் வெண்பாவிற்குரிய தளை தட்டிவிடுகிறது. எனவே இது பிழை என்பதில் சிறிதும் ஐயமில்லை. பழைய உரை எப்பொழுதும் மூலத்திலுள்ள சொற்களைக் கிடக்கை முறையிலே விளக்கிச் செல்வது. இச் செய்யுளின் உரையில் 'நன்றாக்கல்' என்பது 'அறத்தினையே முயன்றொழுகுதல்' என விளக்கப்படுகிறது. 'நன்று' என்பது 'நன்மை' எனப் பொருளாகுமே அன்றி 'அறம்' எனப் பொருள்படாது. ஆகவே பழைய உரையும் இப் பாடம் பிழையெனக் காட்டுகின்றது. கடைசியாக, இச் செய்யுளில் முதலடியும் மூன்றும் அடியும் 'ஒன்று......என்றும்,' 'நாடுக்கல்......கேடுக்கல்' என ஒரூஉத் தொடையாக அமைந்திருத்தலால், இரண்டாம் அடியும் அவ்வாறு அமையவேண்டுமெனக் கருதலாம். இக் காரணங்களால 'அறனாக்கல்' என்பது பாடமாயிருக்கவேண்டும் என ஊகிக்கலாம். இப் பாடத்தில் தளை தட்டவில்லை; பழைய உரையும் பொருத்தமுடையதாகிறது. ஒரூஉத் தொடையும் நன்கு அமைந்து செய்யுளின் இனிமை மிகுகின்றது. இவ்வூகத்திற்கு ஏற்ப, ஏட்டுப் பிரதிகளிலும் இப் பாடமே காணப்படுகிறது. 1901-ல் வெளிவந்த தமிழ்ச் செல்வப் பதிப்பிலும் இந்தப் பாடமே கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே 'அறனாக்கல்' என்பதே உண்மைப் பாடம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒரு சில தவிர மற்றையவெல்லாம் நன்கு பரிசோதித்துப் பதிப்பிக்க வேண்டும் நிலைமையில்தான் இருக்கின்றன. இதற்கு வேண்டும் முயற்சியை நாம் மேற்கொள்ளுதல்வேண்டும்.

நான்மணிக்கடிகை முதலிய நீதி நூல்கள் மிகப் பரவுவதற்குக் காரணமா யிருந்தன கிறிஸ்தவ சங்கங்களும்,

அரசாங்க ஸ்தாபனங்களும், சென்னைப் பல்கலைக் கழகமு மாகும். அவற்றைப் பாலர்க்குரிய நூல்களாகக் கிறிஸ்தவ சங்கத்தார் பதிப்பித்துப் பரப்பினர்; கல்வியிலாகாப் பதிப் பாக வெளியிடுவித்து அரசாங்கத்தார் பரவச்செய்தனர். பல்கலைக் கழகமும் மெட்ரிக்குலேஷன் முதலிய பரீக்ஷை களுக்குரிய பாடப் புஸ்தகத்தில் நீதிநூற் செய்யுட்களைச் சேர்த்துப் பதிப்பித்துப் பரப்பிவந்தனர்; இப்பொழுதும் பரப்பிவருகின்றனர். ஆனல், பெரும் பான்மைப் பதிப்புக் களில், திருந்தாத பாடங்களே காணப்படுகின்றன. எனவே சுத்தமான பதிப்புக்கள் வெளிவரவேண்டுவது அவசியம். இப்போது கிடைக்கும் ஏட்டுப் பிரதிகள் தாமும் அழிந்துவிடுவதற்குமுன், இம்முயற்சியில் நாம் ஈடுபடவேண்டும்.

இந்நூலினைப் பதிப்பிடுதலில் ஒரு சில நியமங்களைக் கையாண்டுள்ளேன். இவற்றைக் குறித்துச் சில ஆண்டுக ளாக நான் கருத்தூன்றி ஆலோசனை செய்ததுண்டு. புது நியமங்களுக்கு அவசியம் உண்டா? என்ற ஐயப்பாடும் இடையிடையே தோன்றியது. ஆங்கிலத்தில் 'சாஸர்' இயற்றிய கவிகளைத் தற்காலத்துள்ளார் பொருளுணர்ந்து கொள்வதற்கு அருமையாயிருத்தல்பற்றி, சொல்லின் எழுத்தமைதியை (Spelling) மாற்றி அச்சியற்றல் தகுமா? இதுபோன்றதுதானே செய்யுளில் சொற்களைப் பிரித்து அச்சிடுதல்? இங்ஙனம் பிரிப்பதால் செய்யுளின் ஓசை கெட்டுவிடுமல்லவா? இவை போன்ற கேள்விகளுக்கு முற்றும் திருப்திகரமான விடையளிப்பது எளிதல்ல. ஆனல், பொருள் எளிதில் விளங்கும்படி அச்சியற்ற வேண்டும் என்ற நோக்கமும் கைக்கொள்ளவேண்டுவதா யுள்ளதே. இரு வகை மனப்பாங்கிற்கும் ஒரு சமரசம் ஏற்படவேண்டியது அவசியம். இந் நெறியில் நான் சிறிது முயற்சி செய்திருக்கிறேன். அனுபவம் பெருகப் பெருக இந் நியமங்கள் திருந்தியமையலாம். செய்யுள்

பயிலுவோரின் தொகை அதிகரித்துவரும் இந் நாளில் இந் நியமங்கள் தக்கபடி ஆராயப்பட்டு அனைவர்க்கும் உடம் பாடான சில நியமங்கள் ஏற்படக்கூடும். அக்காலம் விரைவின்வரின் நலமாகும்.

பொதுவாக நான் செய்துள்ள ஒரு சில வேறுபாடு களைக் குறித்து மட்டுந்தான் இங்கே சொல்ல விரும்பு கிறேன்.

1. செய்யுட்களில் காமா, செமிக்கோலன் முதலிய குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் வாசிப் பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்.

2. நேரிசை வெண்பாக்களில் தனிச் சொல்லை இரண்டாவது அடியில் சிறியதொரு கோடு அமைத்துத் தனிப்படக் காட்டுவது இப்போது வழக்கமாயுள்ளது. இவ் வழக்கம் சமீப காலத்திலேதான் ஏற்பட்டது. முற் காலத்து ஏட்டுப் பிரதிகளில் இது கிடையாது. முதன் முதலில் அச்சிடும் முயற்சியில் இறங்கியவர்களில் சிலர் சிறிது வெற்றிடம் விட்டும், சிலர் இடம்விடாது தொடர்ந் தும் தனிச் சொல்லைப் பதிப்பித்தனர். வேறு சிலர் தனிச் சொற்களுக்குமுன் கலி வெண்பாவில் உடுக்குறியிட்டுப் பதிப்பித்தனர். உதாரணமாக 1831-ல் தாண்டவராய முதலியாரால் 'பழுதற ஆராயப்பட்டு' வெளிவந்த 'திருக் குறண்மூலமும் நாலடி நானூற்றின் மூலமும்' என்ற பதிப்பைக் காண்க. 1868-ல் வெளியிட்ட வடமலை வெண்பாவும் இங்ஙனமே பதிப்பிக்கப்பட்டுள்ளது. மிகப் பிற்பட்ட காலத்தில்தான் (சுமார் 1875) கோடிட்டுக் காட்டும் வழக்கம் ஏற்பட்டது. தனிச் சொல்லை விதித் துள்ள இலக்கண நூல்களில் அதனை இவ்வாறு காட்ட வேண்டும் என்ற குறிப்புக் கொடுக்கப்படவில்லை. கலிப்பா முதலியவற்றுள் தனிச் சொல் வரும்போது அதனைக் கோடிட்டுக் காட்டும் வழக்கம் இன்றும் கிடையாது.

நேரிசைவெண்பாவிலும் கலிவெண்பாவிலும் மட்டுந்தான் இதனை இப்போது கையாண்டு வருகிறார்கள். நேரிசை வெண்பாவில் சில இடங்களில் கோடிடுவது பொருளை எளிதில் உணர்தற்காக இடும் காமா முதலிய குறியீடுகளுக்குத் தடையாயிருக்கிறது. ஆகவே, இப் பதிப்பில் தனிச் சொல்லுக்கு அடையாளமாக இடும் கோடு நீக்கப்பட்டுள்ளது.

3. சொற்களை அசையுறுப்புக் கெடாதவண்ணமும் எதுகை, மோனை, சீர் இவற்றின் நயங்கள் கெடாதவண்ணமும் பிரித்திருக்கிறது.

4. கீழ் வருவனவற்றைப் பிரிக்கவில்லை :—

மரபுவழிப்பட்ட அடைமொழிகள் (உ-ம்) கொடுங்குழை, வாண்முகம்.

சிறுமை, பெருமை, நல், தீ முதலிய அடைமொழிகள் (உ-ம்) பெருங்கடல், பெருஞ்சிறப்பு.

ஒரு சொல் நீர்மைத்தாக அமைந்த சொற்கள் (உ-ம்) வேளாண்மை, மேற்பட, இன்புறூஉம்.

எல்லாம் என்பது சேர்ந்து வரும் பெயர்கள் (உ-ம்) மரமெல்லாம்.

ஆ, ஆக, ஆகிய முதலிய சேர்ந்து வரும் பெயர்ச் சொற்கள் (உ-ம்) வித்தாக.

வேற்றுமையுருபுகள், சாரியை, சொல்லுருபுகள் சேர்ந்துவரும் பெயர்கள் (உ-ம்) படியை, மடியகத்து.

உருபுகள் தொக்குவரும் பெயர்கள் (உ-ம்) அறஞ் சேர்ந்த, காதற்புதல்வர், எள்ளற்பொருளது.

பண்பு குறிக்கும் குறிப்புச் சொற்கள் (உ-ம்) மெல் லென்றல்.

கொள் முதலிய துணைவினைகள் சேர்ந்து வரும் வினைகள் (உ-ம்) பூசிக்கொளினும், தளிர்க்குமாம்.

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

எச்சத்தின்மேல் வரும் அன்ன, அனைய முதலியன (உ-ம்) கற்றன்னர்.

எச்சவாய்பாடுகள் (உ-ம்) சிறிதாயின்.

மேலே குறிக்கப்பட்டனவொழியப் பிற இடங்கள் பெரும்பாலும் பிரிக்கப்பட்டிருக்கும். இப்பதிப்பிலே, வேறு இரண்டு நியமங்கள் முக்கியமாகக் கவனிக்கத்தக்கன. குற்றுகர முற்றுகரங்களும் இன்மைப் பொருளில் வரும் இல்லும் எல்லா இடங்களிலும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

இப் பதிப்புத் திருந்துவதற்குப் பயன்பட்ட ஏட்டுச் சுவடிகளும் முன் பதிப்பு விவரங்களும் இம் முன்னுரையின் பின்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. புஷ்பரதச் செட்டியார் பதிப்பில் காப்பு (உள்பட) 106 செய்யுட்கள் உள்ளன. இவற்றுள் 'வைததனைகும்' (103), 'ஒருவன் அறிவானும்' (104), 'இன்சொலானகும்' (106) என்ற மூன்று செய்யுட்களும் சிறுபஞ்ச மூலத்தைச் சார்ந்தன. அந்நூலில் பழைய உரையோடு இவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் நான்மணிக்கடிகையில் இவை வரற்பாலனவல்ல; ஏட்டுப் பிரதிகளிலும் இவை காணப்படவில்லை. ரிப்பன் பிரஸ் பதிப்பிலும் முறையே 101, 102, 104 - என்ற எண்ணுடையனவாக இச் செய்யுட்கள் காணப்படுகின்றன. 'மதிமன்னு' 'படியை மடியகத்து' என்ற இரண்டையும் கடவுள் வாழ்த்தாகக்கொண்டு 104 செய்யுட்கள் நூலின்கண் உளவாக இப்பதிப்புக் காட்டுகின்றது. 'அலைப்பான் பிறிதுயிரை' என்ற செய்யுளும், 'மனைக்கு விளக்கம்' என்ற செய்யுளும் ஒரு சில

எட்டுப் பிரதிகளில் காணப்படுதல்பற்றி ஈண்டு வெளியிடும் பதிப்பில் இறுதியில் சேர்த்துள்ளேன். குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள் வெளியிட்ட யாழ்ப்பாணப் பதிப்பில் 3 செய்யுட்கள் காணப்படவில்லை. அவையாவன: 'கல்விற் பிறக்கும்' (7), 'நகையினிது' (38), 'யானையுடையார்' (55) என்பன. 32-வது செய்யுளின் (புகைவித்தாப்) பின் ஒரு புதுச் செய்யுள் கொடுக்கப்பட்டுள்ளது. அச் செய்யுள் வருமாறு :

> முனியார் அரிய முயல்வார் ; அவரின்
> முனியார் அறங்கா முறுவார் ; இனிய
> இரங்கார் இசைவேண்டும் ஆடவர் ; அன்பிற்கு
> உயங்கார் அறிவுடை யார்.

இவ் வெளியீட்டில் 67, 68 என்ற எண்ணுள்ள செய்யுட்களும் முன்பின்னாக மாறியுள்ளன.

இந்நூலையும் கீழ்க்கணக்கு நூல்களையும் பதிப்பிடுவதற்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் அனுமதி அளித்துள்ளார்கள். பல்கலைக் கழகத்து மாணவர் வித்வான் திரு. மு. சண்முகம் பிள்ளை இப் பதிப்பு முயற்சியில் பெரிதும் உதவினர். தமிழ்ப் பதிப்பகத்தார் கீழ்க்கணக்கு நூல்களைத் தங்கள் பதிப்பாக வெளியிட இசைந்துள்ளார்கள். சக்தி காரியாலயத்தார் இந் நூல்களை அச்சியற்ற மனமுவந்து இசைந்து அழகாக இந் நூலை வெளியிட்டுள்ளார்கள். இவர்கள் அனைவர்க்கும் எனது நன்றி உரியது.

சென்னை
7-2-44

எஸ். வையாபுரிப் பிள்ளை

ஒப்பு நோக்கிய அச்சுப் புஸ்தகங்கள்

	மூலம் (அல்லது) உரை	பதிப்பித்தவர்	ஆண்டு	பதிப்பு விவரம்
1	புத்துரை	தி. க. சுப்பராயச் செட்டியார்	1872	———
2	,,	வே. இராஜகோபாலப் பிள்ளை	,,	ஊ. புஷ்பரதச் செட்டியார்
3	மூலம்	அ. குமாரஸ்வாமிப் பிள்ளை	1900 சார்வரிஞூ ஆனிமீ	யாழ்ப்பாணம், வித்தியாநுபாலன யந்திர சாலை
4	,,	தி. ச. ஆறுமுக நயினார், திரிசிரபுரம்	1901 பிலவஞூ	தமிழ்ச் செல்வம்: நீதி நூற்றொகை (இரண்டாவது பிரிவு எண் 2)
5	பழைய உரை	ரா. இராகவையங்கார்	1903	செந்தமிழ்ப் பிரசுரம்
6	மூலம்	T. A. ராஜரத்னம் பிள்ளை	1908	பன்மணிக் கோத்து (இரண்டாம் பாகம்)
7	,,	பு. சிதம்பர புன்னைவனநாத முதலியார்	1919	செய்யுட் பாடக் கோவை (முதற் பாகம்)
8	பழைய உரை	வே. இராஜகோபாலையங்கார்	1924	சென்னை, மயிலாப்பூர் கம்பர் விலாஸம்
9	புத்துரை	கா. ர. கோவிந்தராஜ முதலியார்	1925	மதராஸ் ரிப்பன் அச்சு யந்திரசாலை
10	மூலம்		1933	தென்னிந்திய சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், திருநெல்வேலி.

ஒப்பு நோக்கிய ஏட்டுப் பிரதிகள்

	பிரதி செய்த காலம் இடம் முதலியன	உரியவர்
1	பரிதாபி வருஷம் சித்திரை மாசம் 3-ம் தேதி மங்களவாரம் பகல் 20 நாழிகைக்குக் குட்டந்தீர்த்த துறையில் திரு இராஜசேகரன் ஏடு எழுதி முடிந்தது.	திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளை
2	ஆழ்வார் திருநகரி	மதுரைத் தமிழ்ச் சங்க நூல் நிலையம்

விளம்பிநாகனார்

இயற்றிய

நான்மணிக்கடிகை

கடவுள்வாழ்த்து

மதிமன்னு மாயவன் வாண்முகம் ஒக்கும்;
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கரம் ஒக்கும்;
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றுஅவன் கண்ஒக்கும்; பூவைப்
புதுமலர் ஒக்கும் நிறம்.

இதன் பொருள்: மதியை மாயவனது ஒளிமுகம் ஒக்கும்; ஒளிசிறந்த ஞாயிற்றை அவனது சக்கரம் ஒக்கும்; முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்கண் செவ்விமலரை மற்று அவன் கண் ஒக்கும்; நிறம் காயாவினது புதுமலரை ஒக்கும் என்றவாறு. க

படியை மடியகத்து இட்டான்; அடியினுன்
முக்கால் கடந்தான் முழுநிலம்; அக்காலத்து
ஆனிரை தாங்கிய குன்றுஎடுத்தான்; சோவின்
அருமை அழித்த மகன்.

உலகத்தைத் தன் வயிற்றின்கண் வைத்தானும், எல்லா உலகையும் தன் சேவடியான் மும்முறையாற் கடந்தானும், முற்காலத்து ஆனிரையைத் துயர்கெடுக்கவேண்டி மலையை எடுத்தானும், சோஎன்னும் குறும்பின் அருமையை அழித்த மகனும் முன் சொல்லிய மாயவன். உ

இவை இரண்டும் வாழ்த்து.

1. 18 எய்க்கும் **2.** 1 படையை (ரி); 9 ஆமிரை, ஆப்பனித்; 12 கோவின்

நூல்

எள்ளற்க என்றும் எளியர்என்று ; என்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேற்பட ; உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரை ; கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

எளியர் என்று ஒருவரையும் என்றும் இகழாதொழிக ; எல்லாம்பெறினும் தான் சென்று கொள்ளத்தகாதார் கை மேற்படக் கொள்ளாதொழிக ; சிற்றிற் பிறந்தார் செய்த பிழை தன் உள்ளத்தைச் சுடுகின்றதாயினும் அவரை வெகுளாதொழிக ; தனக்குத் தகுதியில்லாத சொற்களை ஆராயாது விரைந்து கூறுதொழிக.

கொள்ளார் என்றது பகைவர் என்றுமாம். ௩

பறைபட வாழா அசுணமா ; உள்ளம்
குறைபட வாழார் உரவோர் ; நிறைவனத்து
நெல்பட்ட கண்ணே வெதிர்சாம் ; தனக்கு ஒவ்வாச்
சொல்பட்டால் சாவதாம் சால்பு.

பறை ஒலித்தால் உயிர்வாழா அசுணமா ; மனம் குறைவுபட உயிர் வாழார் அறிவுடையார் ; மிக்க காட்டின்கண் உள்ள மூங்கில்கள் நெற்பட்டபொழுதே சாம் ; அவைபோல, ஒருவன் தனக்குத்தகாத பழிச்சொற்கள் படவரின், சாவது சால்பாவது. ௪

மண்ணி அறிப மணிநலம் ; பண்அமைத்து
ஏறிய பின்அறிப மாநலம் ; மாசுஅறச்
சுட்டுஅறிப பொன்னின் நலங்காண்பார் ; கெட்டுஅறிப
கேளிரான் ஆய பயன்.

மணியினது நன்மையைக் கழுவி அறிவர் ; பண்ணினை அமைத்து ஏறியபின்னர் அறிவர் மாவினது நன்மையை ; குற்றம் அறும்படிச் சுட்டு அறிவர் பொன்னின் நன்மையைக் காண்பார் ; அவைபோலத் தாங்கள் கெட்டால் அறிவர் கேளிரான் ஆய பயன்.

3. 3 இளையாரென்று ; 7 மேல்வர, மேலவர், மேலாக **4.** 7 பெரியோர்(ரி) ; 8 நிறையகத்து ; 12 தனக்கொல்லாச் ; 13 - 14 சொற்பட் வாழாதாம்(ரி) ; 14 சாவது, சாவர்தஞ் ; 15 சார்பு **5.** 5 - 7 ஏறியறிப்பின் மாநலம் ; 5 - 6 ஏறி அறிபவே ; 11 நலங்காண்பான் ; 13 கேளிரால்

கள்ளி வயிற்றுஇன் அகில்பிறக்கும்; மான்வயிற்று
ஒள்அரி தாரம் பிறக்கும்; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும்; அறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி?

கள்ளியின் வயிற்று இன்அகில் தோன்றும்; மானின் வயிற்று ஒள்ளிய அரிதாரம் தோன்றும்; பெருங்கடலுள் பல் பொருள்களையும் விலையாகப் பெறும் முத்தங்கள் தோன்றும்; அவைபோல, அறிவார் யார் நல்லறிவினை உடையாளொருமகன் பிறக்குங் குடியினை? ௬

கல்லில் பிறக்கும் கதிர்மணி; காதலி
சொல்லில் பிறக்கும் உயர்மதம்; மெல்லென்
அருளில் பிறக்கும் அறநெறி; எல்லாம்
பொருளில் பிறந்து விடும்.

மலையின்கண் பிறக்கும் ஒளியையுடைய மணி; மகளிரது மெல்லிய சொல்லின்கண் பிறக்கும் தன் மனத்திற்களிப்பு; மெல்லென்ற அருளின்கண் பிறக்கும் நல்ல அறநெறிகள்; அவ் அற முதலாயின எல்லாம் பொருளின்கண் பிறக்கும். ௭

திருஒக்கும் தீதுஇல் ஒழுக்கம்; பெரிய
அறன்ஒக்கும் ஆற்றின் ஒழுகல்; பிறனைக்
கொலைஒக்கும் கொண்டுகண் மாறல்; புலைஒக்கும்
போற்றுதார் முன்னர்ச் செலவு.

தான் பிறந்த குலத்திற்குத் தீது வாராமல் ஒழுகும் ஒழுக்கம் செல்வத்தோடு ஒக்கும்; மிக்க அறஞ்செய்கையோடு ஒக்கும் நெறியின்கண் நின்று ஒழுகும் ஒழுக்கம்; பிறனொருவனைத் தனக்கு நட்பாகக்கொண்டுவைத்துப் பின்பு அவன்மாட்டுக் கண்மாறுதல் அவனைக் கொன்றதனோடு ஒக்கும்; தன்னை விரும்பாதார் மாட்டு அவரால் ஒரு பயன்கருதிச் சேறல் புலைமையோடு ஒக்கும். ௮

6. 4 மான்வயிற்றின்; 5 ஒள்ளிய; 13 நல்லர் 7. 7 உயிர்மதம், உயரமுதம்; 8 மெல்லென்று 8. 14 முன்னைச்

கள்வம்என் பார்க்கும் துயில்இல்லை ; காதலிமாட்டு
உள்ளம்வைப் பார்க்கும் துயில்இல்லை ; ஒண்பொருள்
செய்வம்என் பார்க்கும் துயில்இல்லை ; அப்பொருள்
காப்பார்க்கும் இல்லைத் துயில்.

களவுகாணுதும் என்று சோர்வுபார்ப்பார்க்கும்துயில் இல்லை; தம்மால் காதலிக்கப்பட்டாளொருத்தி மாட்டுத் தம் உள்ளம் வைப் பார்க்கும் அவளைக் கூடுமட்டும் துயில்இல்லை ; ஒள்ளிய பொருளைத் தேடுவமென்பார்க்கும் அப்பொருள் கூடுமளவும் துயில் இல்லை ; அத் தேடிய பொருளைப் பிறர் கொள்ளாமற் காப்பார்க்கும் துயில் இல்லை. ௯

கற்றார்முன் தோன்றா கழிவிரக்கம் ; காதலித்துஒன்று
உற்றார்முன் தோன்றா உறாமுதல் ; தெற்றென
அல்ல புரிந்தார்க்கு அறம்தோன்றா ; எல்லாம்
வெகுண்டார்முன் தோன்றா கெடும்.

கற்றார்மாட்டுக் கழிந்த பொருட்கு இரக்கம் தோன்றா ; அன்பு பட்ட பொருளைப் பெறுவதற்கு முயல்வார் மாட்டு அவ் அன்பு பட்டன தமக்கு எய்தாமைக் காரணம் தோன்றா ; தெளியப் பாவமுள்ளவாம் தீவினைகளைப் பயின்று பழகிவந்தார்க்கு அறவினை தோன்றா ; வெகுண்டார்க்கு எல்லா நன்மைகளும் தோன்றா.

உறாமுதல் என்பதனை 'உறுமது' என்றும் 'உசாவுதல்' என்றும் உராவுதல் என்றும் பாடம் ஓதுவாரும்உளர். ௧௦

நிலத்துக்கு அணிஎன்ப நெல்லும் கரும்பும் ;
குளத்துக்கு அணிஎன்ப தாமரை ; பெண்மை
நலத்துக்கு அணிஎன்ப நாணம் ; தனக்குஅணி
தான்செல் உலகத்து அறம்.

9. 1 கள்வேம் ; 5 - 6 உள்ளம்வைத் தார்க்கும் ; 9 செய்வேமென், செய்வாமென், சேர்ப்பாமென் **10.** 7 உறாஉமது, உராவுதல், உசாவுதல் ; 9 அல்லல் **11.** 1 நிலத்திற்கு ; 2 அணியென்பர் ; 5 குளத்திற்கு ; 6 அணியென்பர் ; 8 ப்பன்மை, மேன்மை ; 9 நலத்திற்கு ; 12 - 15 தனக்கணிதான் செல்லுமுலகத்ததாம் (ரி)

நிலத்துக்கு அழகுஎன்று சொல்லுவர் நெல்லையும் கரும்பையும்; குளத்துக்கு அழகுஎன்று சொல்லுவர் தாமரைப் பூவை; அவைபோல, பெண்டிரழகிற்கு அழகுஆவது நாணுடைமை; ஒருவன்தனக்கு அழகுஆவது தான்செல்லும் உலகிற்குத் துணையாகச்செய்யப்பட்ட அறம். ௧௧

கந்தில் பிணிப்பர் களிற்றை; கதம்தவிர
மந்திரத்தி னால்பிணிப்பர் மாநாகம்; கொந்தி
இரும்பில் பிணிப்பர் கயத்தை; சான் றோரை
நயத்தில் பிணித்து விடல்.

தறியினில் பிணிப்படுப்பர் யானையை; சினந்தணியும் வகை மறை மொழியில் பிணிப்படுப்பர் மாநாகத்தை; அவை போல, கழறித் தளை முதலாயினவற்றால் பிணிப்படுப்பர் கீழ்மக்களை; ஈரத்தால் பிணிப்படுக்க சான்றோரை. ௧௨

கன்றாமை வேண்டும் கடிய; பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்; என்றும்
விடல்வேண்டும் தன்கண் வெகுளி; அடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

பிறர் அஞ்சத்தக்கவற்றின்கண் தழும்பாதொழிய வேண்டும்; தனக்குப் பிறர்செய்த நன்றியை மிக மனத்தின்கண் கொள்ள வேண்டும்; எஞ்ஞான்றும் தன்மாட்டு வெகுளியை நீக்க வேண்டும; தன் செல்வத்தைக் கேடு செய்யுஞ் செய்கையைக் கெடுக்க வேண்டும். ௧௩

பல்லினான் நோய்செய்யும் பாம்பெல்லாம்; கொல்களிறு
கோட்டான்நோய் செய்யும் குறித்தாரை; ஊடி
முகத்தான்நோய் செய்வர் மகளிர்; முனிவர்
தவத்தில் தருக்குவர் நோய்.

12. 4 கதந்தவிர், சினந்தவிர; *12* றாண்மை ***13.*** 6 நன்றாகக், க்கொல்லாக்(ரி) ***14.*** 4 கொல்லேறு; 11 மகளீர்; 13 தவத்தால்; 14 தருகுவர்; 12-15 முனியா தவத்திற் றருக்குவானோய்

பல்லானே பிறரைத் துன்பஞ் செய்யும் பாம்பெல்லாம்; கொல்களிறு தான் கொலை குறித்தாரைக் கோட்டானே துன்பஞ் செய்யும்; மகளிர் தம் காதலரைப் புலந்து முகத்தானே துன்பம் செய்வர்; அவைபோல, அருந்தவரும் தமது தவத்தானே தம்மை இகழ்ந்தார்க்குத் துன்பத்தை மிகுவிப்பர். க௬

பறைநன்று பண்அமையா யாழின்; நிறைநின்ற
பெண்நன்று பீடுஇலா மாந்தரின்; பண்அழிந்து
ஆர்தலின் நன்று பசித்தல்; பசைந்தாரின்
தீர்தலின் தீப்புகுதல் நன்று.

வீக்குதல் அமையாத யாழோசையின், பறையோசை நன்று; பெருமையில்லாத ஆடவரின், நிறையுடைமையினின்ற பெண்ணே நன்று; ஒழுக்கம் அழிந்து உண்டலின், பசித்தலே நன்று; அன்புபட்டாரின் நீங்குதலின், தீயின்கண் புகுதலே நன்று.

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை; கிளைக்குழாம்
இன்சொற் குழியுள் இனிதுஎழூஉம்; வன்சொல்
கரவுஎழூஉம் கண்இல் குழியுள்; இரவுஎழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து.

செல்வப்பாத்தியுள்ளே தோன்றி வளரும் ஈகை; இன்சொற் பாத்தியுள்ளே இடையூறின்றியே தோன்றிவளரும் தன் சுற்றக்குழாம்; கண்ணோட்டம் இல்லாத பாத்தியுள் கடுஞ் சொல்லும் கரத்தலும் தோன்றி வளரும்; வறுமைப் பாத்தியுள் தோன்றி வளரும் இரப்பு. க௭

இன்னாமை வேண்டின் இரவுஎழுக; இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக; தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க; வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

16. 4 கிளைக்குழாஅம்; 6 குழியின், குழியில்; 7 இனிதெழும்; 8 வன் சொலாம்(ரி); 11 குழியின்; 12 இரவெழும், இழிவெழூஉம்; 14 குழியின், குழியில் **17.** 1 இன்னாத; 3 இரவொழுக; 4 இந்நிலத்தில்; 8 தம்மொடு

ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வேண்டின் இரப்பினைத் தொடங்குக; இவ்வுலகின்கண் என்றும் உளனாகை வேண்டின் புகழை நிறுத்துக; தன்னொடு மறுமைக்குத் துணையாகச் செல்வதனை வேண்டினையின் அறத்தைச் செய்க; தான் வென்றியை வேண்டினையின் வெகுளியைத் தவிர்க. கஎ

கடற்குட்டம் போழ்வர் கலவர்; படைக்குட்டம்
பாய்மா உடையான் உடைக்கிற்கும்; தோம்இல்
தவக்குட்டம் தன்னுடையான் நீந்தும்; அவைக்குட்டம்
கற்றான் கடந்து விடும்.

கடலின் ஆழத்தை ஊடறுத்துச் செல்வர் நாவாயினையுடையார்; சேனையின் அருமையை வென்றுசெல்லும் பாய்மாவினை யுடையவன்; குற்றமில்லாத தவத்தின் அருமையைத் தன் மனத்தினைத் தனக்கெனவுடையான் நீந்திக் கடக்கும்; அவையினது அருமையைக் கற்றுவல்லவன் வென்றுவிடும். கஅ

பொய்த்தல் இறுவாய நட்புக்கள்; மெய்த்தாக
மூத்தல் இறுவாய்த்து இளநலம்; தூக்குஇல்
மிகுதி இறுவாய செல்வங்கள்; தத்தம்
தகுதி இறுவாய்த்து உயிர்.

வஞ்சித்தலை ஈறாகவுடையவாயிருக்கும் நட்புக்கள்; மெய்ம்மையாக மூத்தலை இறுவாயாக வுடையது இளமை நலம்; ஆராய்தலையில்லாத செருக்கினை இறுவாயாகவுடையவாயிருக்கும் செல்வங்கள்; தத்தமுடைய ஒழுக்கங்களை இறுவாயாக வுடையது உயிர்வாழ்வு. கக

மனைக்குஆக்கம் மாண்ட மகளிர்; ஒருவன்
வினைக்குஆக்கம் செவ்வியன் ஆதல்; சினச்செவ்வேல்
நாட்டுஆக்கம் நல்லன்இவ் வேந்துஎன்றல்; கேட்டுஆக்கம்
கேளிர் ஒரீஇ விடல்.

19. 3 நட்புகள்; 7 இளைநலம்(ரி) 20. 10 நல்லானிவ், நல்லணி

ஒருவனது மனைக்குச் செல்வமாவது மாட்சிமையுடைய மகளிர் உளராதல்; ஒருவனது காரியத்துக்கு ஆக்கமாவது செப்பம் உடையவனாதல்; நாட்டுக்கு ஆக்கமாவது அந்நாட்டை ஆளுஞ் சினச்செவ்வேலையுடைய வேந்தன் நல்லனென்று பிறரால் சொல்லப்படுதல்; ஒருவன் கேட்டுக்கு ஆக்கமாவது தன் சுற்றத் தாரை மேவாது நீங்கி விடுதல். உ0

பெற்றான் அதிர்ப்பின் பிணையன்னாள் தான்அதிர்க்கும்;
கற்றான் அதிர்ப்பின் பொருள்அதிர்க்கும்; பற்றிய
மண்அதிர்ப்பின் மன்னவன் கோல்அதிர்க்கும்; பண்அதிர்ப்பின்
பாடல் அதிர்ந்து விடும்.

தன்கொழுநன் ஒழுக்கத்திற் கலங்கினானாயின், அவன் மனை யாளும் அவன் வழியினளாகலான், அவளும் கலங்கும்; கற்றான் கலங்குமாயின், அவன் கற்ற நூலும் கலங்கும்; தன்னான் ஆளப் படுகின்ற நாடு நெறிநில்லாது கலங்குமாயின், அரசன் செங்கோ லும் கலங்கும்; யாழின்கண் வீக்குக் கலங்குமாயின், பாடலும் கலங்கும். உக

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மை; தான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை இன்மை; இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை இன்மை; தனக்குப்பாழ்
கற்றறிவு இல்லா உடம்பு.

தன்மனைக்குப் பாழாவது மனையாளை இல்லாமை; தான் செல்லக்கடவ திசைக்குப் பாழாவது தன்னொடு நட்புடையாரை இல்லாமை; தான்இருந்த அவைக்குப் பாழாவது [1]அறிவான் முதிர்ந்தாரை இல்லாமை; தனக்குப் பாழாவது கற்றுணர் வில்லாத உடம்பு. உஉ

மொய்சிதைக்கும் ஒற்றுமை இன்மை; ஒருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலும் மேனியை; பெய்த
கலம்சிதைக்கும் பாலின் சுவையை; குலஞ்சிதைக்கும்
கூடார்கண் கூடி விடின்.

21. 8 பாரிய(ரி); 9 மன்னதிர்ப்பின் **22.** 4 சென்ற; 6 நட்டாரை
23. 13 கூடார்கள். 1 உணர்வான்

பெருமையை அழிக்கும் ஒற்றுமையின்மை; ஒருவனைத் தன் பொன்போலு மேனியைத் தான் உரைக்கும் பொய் கெடுக்கும்; பாலினது சுவையைப் பால்பெய்த பொல்லாக் கலம் கெடுக்கும்; தான்பிறந்த குலத்தைக் கெடுக்கும் தனக்கு இனமல்லாதாரை இனமாகக் கூடின். உ௩

புகழ்செய்யும் பொய்யா விளக்கம்; இகழ்ந்துஒருவன்
பேணுமை செய்வது பேதைமை; காணுக்
குருடராச் செய்வது மம்மர்; இருள்தீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

ஒருவன் பொய்சொல்லாமை என்னும் விளக்கம் அவற்குப் புகழை விளைக்கும்; யாதனையும் இகழ்ந்து பாதுகாவாமையைச் செய்வது ஒருவனது அறிவின்மை; யாதொன்றனையும் உண்மை காணுக் குருடராய்ச் செய்வது கல்லாமை; மயக்கந் தீர்ந்த கண்ணுடையராகச் செய்வது கல்வி. உ௪

மலைப்பினும் வாரணம் தாங்கும்; குழவி
அலைப்பினும் அன்னேஎன்று ஓடும்; சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யார்; ஒட்டார்
உடனுறையுங் காலமும் இல்.

மேல் வலிதாகிய பகை வந்து தன்னை அலைப்பினும் யானை போரைத் தாங்கும்; குழவியைத் தாய் அலைப்பினும் அக்குழவி அன்னேஎன்று அவள் பின்னே செல்லும்; நட்டாரோடு நட்டார் வெகுண்டு வினைசெய்வாராயினும் அவர் நடுங்கும் வினைசெய்யார்; பொருந்தாதார் ஒருவகையாற் பொருந்தினராயினும் மனத்தால் பொருந்தி உடன்உறையுங் காலமும் இல்லை.

மேற்கொண்டவன் மலைப்பினும் என்றுமாம். உ௫

24. 4 இகந்தொருவர்ப்(ரி); 9 குருடனுச்(ரி); 12 மருள்தீர்ந்த
25. 4-7 அலைப்பினு மன்னேயென் றோடுங்குழவி(ரி); 5 உலைப்பினும்; 6 அன்னை யென்று; 7 ஓதும்; 13 உடனுறங்கும்

நசைநலம் நட்டார்கண் நந்தும்; சிறந்த
அவைநலம் அன்பின் விளங்கும்; விசைமாண்ட
தேர்நலம் பாகனுல் பாடுஎய்தும்; ஊர்நலம்
உள்ளானுல் உள்ளப் படும்.

நசையினது நன்மை நட்டார்மாட்டுச் சிறக்கும்; அவையினது நன்மை மாறுபாடின்றி அன்புடைத்தாமாயின் விளங்கும்; விசைமாட்சிமைப்பட்ட தேரினதுநலம் ஊரும்பாகனுல் பெருமை எய்தும்; ஊரினது நலம் அவ்வூர்க்கு முதன்மை யுடையவன் நன்மையானே நினைக்கப்படும். உசு

அஞ்சாமை அஞ்சுக; ஒன்றின் தனக்குஒத்த
எஞ்சாமை எஞ்சும் அளவெல்லாம்; நெஞ்சுஅறியக்
கோடாமை கோடி பொருள்பெறினும்; நாடாமை
நட்டார்கண் விட்ட வினை.

பழி முதலாயினவற்றை அஞ்சாமையை அஞ்சுக; பொருந்துமாயின் தனக்குத் தகுதியாகிய ஒழுக்கங்களைத் தான் [1]நிற்குமளவும் தவிராதொழிக; தன்மனம் அறியக் கோடாதொழிக, கோடி பொருள்பெற்ருனுயினும்; ஆராயாதொழிக, தனக்கு நட்டாராயினர்மாட்டுத் தான் செய்யவிட்ட காரியத்தை. உஎ

அல்லதூஉம், நட்டாரோடுகூடிச் செய்யாத வினையை நாடாதொழிக என்றுமாம்.

கோல்நோக்கி வாழும் குடியெல்லாம்; தாய்முலையின்
பால்நோக்கி வாழும் குழவிகள்; வானத்
துளிநோக்கி வாழும் உலகம்; உலகின்
விளிநோக்கி இன்புறூஉம் கூற்று.

அரசன் செங்கோல் நோக்கி வாழும் உலகத்துக் குடிகளெல்லாம்; பெற்ற தாயினது முலைப்பாலை நோக்கி வாழும் குழவிக

26. 1 நகைநலம்(ரி); 5 அவைநலன்; 9 தேர்நலன்; 12 ஊர்நலன்; 13 உள்ளானுன், உள்ளாரால் 27. 2 அஞ்சுதி(ரி); 2-3 அஞ்சுவதொன்றிற்; 4 தனக்கோத; 6 எஞ்சல்(ரி); 8 நெஞ்சத்துக்; 10 கோடிப்; 12 நாடாதி(ரி); 13 நாட்டார்கண் 28. 4 தாய்முலைப்(ரி); 12 உலக(ரி). 1 இறக்கு.

ளெல்லாம்; வானத்தின்கணுள்ள துளியினை நோக்கி வாழும் உலகமெல்லாம்; அவ்வுலகின் சாக்காட்டினை நோக்கி இன் புறூஉம் கூற்றம். ௨௮

கற்பக் கழிமடம் அஃகும்; மடம்அஃகப்
புற்கம்தீர்ந்து இவ்வுலகில் கோள்உணரும்; கோள்உண
தத்துவம் ஆன நெறிபடரும்; அந்நெறியே [ர்ந்தால்
இப்பால் உலகத்து இசைநிறீஇ, உப்பால்
உயர்ந்த உலகம் புகும்.

ஒருவன் கற்கவே மிக்க பேதைமை குறையும்; பேதைமை குறையப் புல்லறிவுதீர்ந்து இவ்வுலகத்துள்ள இயற்கையை அறியும்; அவ்வியற்கையை அறிந்தால் மெய்ம்மையாகிய வீட்டுநெறியின்கண் செல்லும்; அச்செல்லப்படுகின்ற நெறியானே இவ்வுலகின்கண் புகழைநிறுத்தி உப்பக்கத்து உயர்ந்த வீட்டுலகம் புகும்.

குழித்துழி நிற்பது நீர்; தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்; அழித்துச்
செறுவுழி நிற்பது காமம்; தனக்குஒன்று
உறுவுழி நிற்பது அறிவு.

குழித்த நிலத்துள்ளே நிற்பது நீர்க்கு இயற்கையாவது; பல்லோரும் பழிக்கப்பட்டவன்மாட்டே பாவம் நிற்பது; தனக்கு நண்பாயினர் [1]அழித்துத்தடுக்கவும் தான் சென்றுழிச் செல்வது காமமாவது; தனக்கு ஒரு துன்பம் வந்துற்றால் அவ்விடத்தே வந்து உதவிநிற்பது அறிவு. ௩௦

திருவின் திறலுடையது இல்லை ஒருவற்கு;
கற்றலின் வாய்த்த பிறஇல்லை; எற்றுள்ளும்
இன்மையின் இன்னாதது இல்லை; இலம்என்னும்
வன்மையின் வன்பாட்டது இல்.

29. 1 கற்கக்; 4 அதுவஃக, மடமஃகிற்; 5 புற்பந்தீர்ந்து, குற்றந்தீர்ந்து; 6 இவ்வுலகின்(ரி); 8 கோளுணர்ந்தான்(ரி); 12 அந்நெறி **30.** 3-4 நீர்கந் தன்னைப்; 9 செறிவுழி(ரி) **31.** 2 திறனுடையது; 11 - 12 இல்லையில லென்னாத(ரி); 12 இலனென்னும்; 14 வன்பாடது(ரி). 1 கழித்துத்

செல்வம்போல ஒருவற்கு வலியுடையது பிறிது இல்லை; கல்வி போலப் பயன்படுவன பிற இல்லை; யாதனுள்ளும் [1]இன்மை போல இன்னாதது ஒன்று இல்லை; யாதொரு பொருளும் இலம் என்று பிறரை இரக்கும் வன்மைபோல வலியதிறன் இல்லை.

அல்லதூஉம், இரந்துசென்றார்க்கு யாதும் இலம்என்று மறுக்கும் வன்மைபோல வலியதிறமில்லை என்றுமாம். ௩௧

புகைவித்தாப் பொங்குஅழல் தோன்றும்; சிறந்த
நகைவித்தாத் தோன்றும் உவகை; பகைஒருவன்
முன்னம்வித் தாக முளைக்கும்; முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும்.

புகை காரணமாக, ஓங்குநெருப்பு உண்டென்று அறியலாம்; ஒருவன்மாட்டுஉள்ள முறுவல் காரணமாக, அவன் மனத்துள்ள [2]உவகை தோன்றும்; ஒருவன் செய்த இன்னாக் குறிப்புச் செய்கைகளான், அவன் மனத்துள்ள பகைமை வெளிப்படும்; அப்பகைமை பின்பு வினைவயின் இன்னாமைகளுக்குக் காரணமாகத் தோன்றும். ௩௨

பிணிஅன்னர் பின்நோக்காப் பெண்டிர்; உலகிற்கு
அணிஅன்னர் அன்புடைய மக்கள்; பிணிபயிலும்
புல்அன்னர் புல்லறிவின் ஆடவர்; கல்அன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

ஒருவர்க்கு உற்றநோயோடு ஒப்பர் பின்புவரும் பழியை ஆராயாது செய்யும் மகளிர்; உலகத்திற்கு அலங்காரத்தை ஒப்பர் எல்லா உயிர்க்கும் அன்புடைய மக்கள்; பிறர்க்குப் பிணியை வருவிக்கும் நச்சுப்புல்லோடு ஒப்பர் புல்லிய அறிவினையுடைய ஆடவர்; கல்லோடு ஒப்பர் வலிய நெஞ்சத்தை யுடையார். ௩௩

32. 1 புகைவித்தாற், புகைவித்தாய்ப்; 5 நகைவித்தாற், நகைவித்தாய்த்; 10 தாகி **33.** 6 அன்புடை; 7 மாக்கள்; 8 பிணிபேணும், பிணிப்பினும், பிணிபயிரின்(ரி). 1 வறுமைபோல. 2 அன்புடைமை.

அந்தணரின் நல்ல பிறப்புஇல்லை ; என்செயினும்
தாயின் சிறந்த தமர்இல்லை ; யாதும்
வள்மையோடு ஒக்கும் வனப்புஇல்லை ; எண்ணின்
இளமையோடு ஒப்பதூஉம் இல்.

மறையவர் பிறப்புப்போல மிக்க பிறப்பு இல்லை; எல்லா நன்மையுஞ் செய்தாராயினும் தாயைப்போல மிக்க தமர் இல்லை; செல்வத்தோடு ஒக்கும் அழகு மற்று யாதும் இல்லை; ஆராயின், இளமைக் காலம்போல எல்லா நன்மையும் முடிக்கலாவது பிறிதொன்றும் இல்லை. ௩௪

இரும்பின் இரும்புஇடை போழ்ப ; பெருஞ்சிறப்பின்
நீர்உண்டார் நீரான்வாய் பூசுப ; தேரின்
அரிய அரியவற்றால் கொள்ப ; பெரிய
பெரியரான் எய்தப் படும்.

இரும்பால் செய்த கருவிகளானே இரும்பினை இடையே போழ்வர்; பெருஞ்சிறப்பினையுடைய நீரினையுண்டார் நீரானே அந்நீரினையுண்ட வாயினைப் பூசுவர்; ஆராயின், பெறுதற்கரிய பயன்களைப் பெறுதற்கரிய காரணங்களால் முடித்துக் கொள்வர்; பெரியவா யுள்ள சிறப்புக்கள் பெரியரானே எய்தப்படும். ௩௫

மறக்களி மன்னர்முன் தோன்றும் ; சிறந்த
அறக்களி இல்லாதார்க்கு ஈயுமுன் தோன்றும் ;
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றாம் ; கயக்களி
ஊரில் பிளிற்றி விடும்.

வீரத்தான் வருங் களிப்புச் சேவகர்க்குத் தம்மைஆண்ட அரசர் முன்பு தோன்றும்; ஒருவன் மனத்தின்கண் மிக்க அறக்களிப்பு வறுமையுற்றார்க்கு உதவுமிடத்துத் தோன்றும்; எஞ்ஞான்றும் செல்வராயினர் தம்மையொன்று ஏவினால், அவ்

34. 14 ஒப்பது, ஒப்பதுவும் **35.** 5 - 6 நீருண்டால் நீரால்வாய், நீருண்ட நீரான்வாய் ; 11 கொள்க; 13 பெரியாரின் **36.** 6 அல்லாதார்க்கு(ரி); **7 - 8** ஈயுமற்றென்றும் ; 14 பிளிற்று, பிலிற்றி

ஏவலான் வருங் களிப்பு நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றும்; கயமையான்வருங் களிப்புத் தான் வாழும் ஊரின்கண் தோன்றி ஆரவாரம் பெருக்கிவிடும்.

அல்லதூஉம், 'வியக்களி நல்கூர்ந்தார் மேற்றும்' என்பது யாதானும் ஒரு பொருள் பெற்றால் அதனைக்கண்டு வியக்குங்களி நல்கூர்ந்தார் மாட்டுத் தோன்றும் என்றுமாம். நசு

மையால் தளிர்க்கும் மலர்க்கண்கள் ; மால்இருள்
நெய்யால் தளிர்க்கும் நிமிர்சுடர் ; பெய்ய
முழங்கத் தளிர்க்கும் குருகிலை ; நட்டார்
வழங்கத் தளிர்க்குமாம் மேல்.

அஞ்சனத்தால் தளிர்க்கும் மலர்போன்ற கண்கள்; பேரிருளின்கண் நிமிர்ந்து எரியும் விளக்கு நெய்பெற்றால் தளிர்க்கும்; பெய்தற்கு முழங்கவே தளிர்க்கும் குருகிலை; நட்டார்க்குப் பொருள் வழங்கத் தளிர்ப்பர் மேலாயினோர். நஎ

நகைஇனிது நட்டார் நடுவண் ; பொருளின்
தொகைஇனிது தொட்டு வழங்கின் ; தகைஉடைய
பெண்இனிது பேணி வழிபடின் ; பண்இனிது
பாடல் உணர்வா ரகத்து.

நட்டார் நடுவணிருந்து [1]நகை இனிது; பொருளின் கூட்டம் இனிது தொட்டுவழங்குவா னாயின்; சிறப்புடைய பெண் இனிது தன்கொழுநனைப் பேணி வழிபடின்; பண் இனிது பாட்டின் தொழிலை அறிவாரிடத்து. நஅ

கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தல்;எஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சார்ஒன் றுஈவோர்; பரப்புஅமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை ; ஊன்உண்டல்
செய்யாமை செல்சார் உயிர்க்கு.

37. 1-5 மையிற் றளிர்க்கு மரக்கண மாயிரு ணெய்யிற்; 8 பெய்யல்(ரி) **38.** 8 வகைமாண்ட, வகையுடைய, வகையுடைப்(ரி) **39.** 6 செல்சார் வொன்று; 7 ஈவார்(ரி); 9 சேனைக்குச்; 14 - 15 செல்சார்வுயிர்க்கு. 1 உவகை.

இரந்தவர்க்கு ஒன்று ஈயாமைக் கரப்பவர்க்குப் பற்றுக்கோடு முகங்கவிழ்தல்; எஞ்ஞான்றும் இரப்பவர்க்குப் பற்றுக்கோடாவார் யாதானும் ஒன்றனைக் கொடுப்பார்; பரப்பு நிரம்பிய சேனைக்குப் பற்றுக்கோடு தறுகண்மை; ஒருவன் உயிருக்குப் பற்றுக்கோடு ஊன் உண்ணாமை. ௩௯

கண்டதே செய்பவாம் கம்மியர்; உண்டுஎனக்
கேட்டதே செய்ப புலன்ஆள்வார்; வேட்ட
இனியவே செய்ப அமைந்தார்; முனியாதார்
முன்னிய செய்யும் திரு.

தாம் கண்ணால் கண்டதனையே செய்ய வல்லாராம் கம்மியர்; உண்டென்ற நூலை நெறியால் கேட்டதனையே செய்வர் அறிவினை ஆள்வார்; தாம் காதலித்தனவற்றுள் எல்லார்க்கும் இனியனவற்றையே செய்வர் குணங்களான் அமைந்தார்; சினம்இல்லாதார் கருதினவற்றையே செய்யும் திருமகள். ௪௦

திருவும் திணைவகையான் நில்லா; பெருவலிக்
கூற்றமும் கூறுப செய்துஉண்ணாது; ஆற்ற
மறைக்க மறையாதாம் காமம்; முறையும்
இறைவகையான் நின்று விடும்.

செல்வங்களும் குடிப்பிறப்பின் நன்மையான் நில்லா; பெருவலியையுடைய கூற்றமும் தான் உண்ணப்படுகின்றவன் சொல்லுவனவற்றைச் செய்து உண்ணாது; மிகவும் மறைப்ப மறைவுண்ணாது காமமும்; முறைமையும் அரசன் வகையானே நிற்பது. ௪௧

பிறக்குங்கால் பேர்எனவும் பேரா; இறக்குங்கால்
நில்எனவும் நில்லா உயிர்எனைத்தும்; நல்லாள்
உடம்படின் தானே பெருகும்; கெடும்பொழுதில்
கண்டனவும் காணா கெடும்.

40. 1 கண்டது; 2 செய்குவர், செய்பவர், செய்வதாம், செய்வராம்; 5 கேட்டது; 6 செய்வர்; 7 புலனாள்வோர்; 8 வேட்ப, பெட்ட, பெட்ப, 13 முன்னியவே(ரி) **41.** 3 இல்லை; 7 செய்துண்ணா; 9-10 மறைக்கு மறையாதார் **42.** 3 பேராது(ரி); 6 நில்லாது(ரி); 7 உயிரனைத்தும்; 14 காணாக(ரி)

உயிரெல்லாம் பிறக்கும்பொழுது தவிர் எனவும் தவிரா; இறக்கும்பொழுது நிற்க எனவும் நில்லா; திருமடந்தை மன மகிழ்ந்து உடம்படின் செல்வம் தானே பெருகும்; அச்செல்வம் கெடும்பொழுது கண்ணுற் காணப்பட்டுள்ளவாய் நின்ற பொருள் களும் காணப்படாவாய்க் கெடும். சஉ

போர்அறின் வாடும் பொருநர்சீர்; கீழ்வீழ்ந்த
வேர்அறின் வாடும் மரமெல்லாம்; நீர்பாய்
மடைஅறின் நீள்நெய்தல் வாடும்; படைஅறின்
மன்னர்சீர் வாடி விடும்.

போர்இன்றிவிடின் பொருபடையாளர் சீர்மை அழியும்; கீழ் வீழ்ந்த வேர்அறுமாயின் மரங்களெல்லாம் உலரும்; நீர்பாயும் மடையின்கண் நீர்அறின் நீண்ட நெய்தல் மலர்கள் உலரும்; சேனை இன்றிவிடின் அரசர் சீர்மை வாடும். சங

ஏதிலார் என்பார் இயல்புஇல்லார்; யார்யார்க்கும்
காதலார் என்பார் தகவுஉடையார்; மேதக்க
தந்தை எனப்படுவான் தன்உவாத்தி; தாய்என்பாள்
முந்துதான் செய்த வினை.

ஒருவர்க்கு அயலாராவார் குணம்இல்லாதார்; யாவர்க்கும் அன்புபடப்படுவார் குணமுடையார்; விரும்பத்தக்க தாதை எனப் படுவான் தன்னை ஓதுவித்தவன் ஒருவன்; தனக்குத் தாய் என்பாள் முற்பிறப்பில் தான்செய்த நல்வினை. சச

பொறிகெடும் நாண்அற்ற போழ்தே; நெறிபட்ட
ஐவரால் தானே வினைகெடும்; பொய்யா
நலம்கெடும் நீர்அற்ற பைங்கூழ்; நலம்மாறின்
நண்பினர் நண்பு கெடும்.

43. 1 போரின்றி; 4 விழுந்தம்; 5 வேரின்றி; 9 மடையின்றி, மடையிறின்; 12 படையின்றி, கொடையின்றி **44.** 1 ஏதிலர்; 3 இயைபி லரி(ரி); 5 காதலர்; 10 - 12 யுபாத்தி யெனப்படுவான் தாயென்ப(ரி); 11 தன்வாத்தி **45.** 3 போதே; 4 நெறிப்பட்ட; 12–13 நலமாறு நண்பி ஞன்; 13 நண்பினர்(ரி)

செல்வம் கெடும் ஒருவற்கு நாண் இன்றி யொழிந்த பொழுதே; தன்வயத்தனவாய் வழிப்பட்ட ஐவகைப்பொறிகளாலும் பிறப் பிற்குக் காரணமாகிய வினை கெடும் ; பழுதுபடாத விளைவின் நலங் கெடும் நீர்அற்ற பைங்கூழ் ; மனத்தின்கண் உளதாம் ஈரம் துவரின் நண்புடையார் நண்பு கெடும்.

அல்லதூஉம், 'பொறி கெடும் நாணற்ற போழ்தே' என் பது கயிறற்றபொழுதே பாவையாகிய பொறிகெடும் என்று மாம். சரு

நன்றிசாம் நன்றுஅறியா தார்முன்னர் ; சென்ற
விருந்தும் விருப்பிலார் முன்சாம் ; அரும்புணர்ப்பின்
பாடல்சாம் பண்அறியா தார்முன்னர் ; ஊடல்சாம்
ஊடல் உணரா ரகத்து.

செய்த நன்றியை அறியாதாரிடத்துச் செய்த நன்றி கெடும் ; விருப்புஇலாரிடத்துச் சென்ற விருந்து வாடும் ; அரிதாகப் புணர்ந்த புணர்ப்பினையுடைய பாடல்கெடும், பண்ணினை அறியாதார் முன்பு; ஊடிய ஊடலும் கெடும், ஊடியவற்றை உணரா தொழிந்தார் மாட்டு. சசு

நாற்றம் உரைக்கும் மலர்உண்மை ; கூறிய
மாற்றம் உரைக்கும் வினைநலம் ; தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனம்உரைக்கும் ; முன்னம்
முகம்போல முன்உரைப்பது இல்.

மலர்உண்டு என்பதனை அம்மலரினது நாற்றமே அறிவிக்கும் ; ஒருவன் சொல்லியசொல்லே அறிவிக்கும் அவன் செய்கை நலத்தினை ; ஆராயின் உட்கிடந்த தீமையை மனமே அறிவிக்கும் ; மனத்தின் விளைவினை முகம்போல முற்பட அறிவிப்பது மற் றொன்று இல்லை. சஎ

46. 6 விரும்பிலார் ; 8 மருந்தனைய ; 14 உணர்வா 47. 9 அகம் பொதி ; 10 தின்மை(ரி) ; 11 முகனுரைக்கும் ; 12 எல்லாம்

மழைஇன்றி மாநிலத்தார்க்கு இல்லை ; மழையும்
தவம்இலார் இல்வழி இல்லை ; தவமும்
அரசுஇலர் இல்வழி இல்லை ; அரசனும்
இல்வாழ்வார் இல்வழி இல்.

மழைஇன்றிவிட்டால் உலகத்தின் மக்கட்கு உணவு இல்லை ; அம் மழைதானும் தவஞ் செய்யாதார் இருப்பிடங்களுள் இல்லையாம் ; அத் தவஞ்செய்கை தானும் அரசின் முறைமை இல்லாத அரசரிருப்பிடங்களுள் இல்லை ; அவைபோல, இல்லையாம் அவ் அரசன் தானும் குடிகள் இல்லாத இடங்களுள். சஅ

போதினன் நந்தும் புனைதண்தார் ; மற்றுஅதன்
தாதினன் நந்தும் சுரும்பெல்லாம் ; தீதுஇல்
வினையினன் நந்துவர் மக்களும் ; தத்தம்
நனையினன் நந்தும் நறு.

பூவினன் மிக்குப் பொலியும் புனையப்பட்ட தண் தார் ; அப் பூவின் தாதினன் மிக்குப்பொலியும் வண்டுகளெல்லாம் ; குற்றமில்லாத செய்கைகளான் மிகுவர் மக்களும் ; தத்தம் நனை கொள்கையான் மிக்கு நல்லவாம் மதுக்கள். சகூ

சிறந்தார்க்கு அரிய செறுதல்;எஞ் ஞான்றும்
பிறந்தார்க்கு அரிய துணைதுறந்து வாழ்தல்;
வரைந்தார்க்கு அரிய வகுத்தூண் ; இரந்தார்க்குஒன்று
இல்என்றல் யார்க்கும் அரிது.

தொடர்ச்சி மிக்கார்க்கு அரிய செறுதல் ; பிறந்தார்க்கு எஞ்ஞான்றும் அரிய தம் இனத்தைத் துறந்து வாழ்தல் ; உணவினை வரைந்தார்க்கு அரிய பிறர்க்குப் பகுத்து உண்டல்; இரந்து வந்தார்க்குத் தாம் ஒன்றினை இல்லைஎன்றல் யாவர்க்கும் அரிது.

48. 5 தவமிலான் ; 9 - 10 அரசிய லில்வழி, அரச ரிலாவழி, அரசிலா னில்வழி, அரசியலா னில்வழி ; 13 இல்வாழ்வான் **49.** 1 பூவினன் ; 3 புணர்தண்டார் ; 11 மாக்களும் **50.** 2, 6, 10 அரிது ; 3 செறுத்தல் ; 11 வகுத்தல்

இரைசுடும் இன்புறு யாக்கையுள் பட்டால்;
உரைசுடும் ஒண்மை இலாரை; வரைகொள்ளா
முன்னை ஒருவன் வினைசுடும்; வேந்தனையும்
தன்அடைந்த சேனை சுடும்.

பிணியினால் துன்பமுறுகின்ற உடம்பின்கண்பட்ட உணவு துன்பத்தைச் செய்யும்; அறிவின் ஒண்மையிலாதார்தம் வாயிற் சொல்லே தங்களைத் துன்பம் உறுத்தும்; முற்காலத்துச் சீலங்களை வரைந்து கொள்ளாது நெறியைக் கடந்து செய்த தீவினைகள் பிற்காலத்து வந்து சுடும்; வரைகொள்ளாத தன்னடைந்த சேனை வேந்தனைச்சுடும். இதற்கு முன்சொன்ன வரைகொள்ளா என்னுஞ் சொல்லை வருவித்துப் பொருளுரைத்துக் கொள்க. ருக

எள்ளற் பொருளது இகழ்தல்; ஒருவனை
உள்ளற் பொருளது உறுதிச்சொல்; உள்அறிந்து
சேர்தற் பொருளது அறநெறி; பன்னூலும்
தேர்தற் பொருள பொருள்.

ஒருவற்கு இகழத்தக்கது பிறரை இகழும் இகழ்ச்சி; ஒருவனை நட்புஎன்று உள்ளத்தகுவது அவன் சொல்லும் உறுதிச்சொல் லால்; உண்மையறிந்து அடையத்தக்கது அறநெறி; எப்பொழு தும் ஆராயத்தக்கன சகல நூல்களினுஞ் சொன்ன பொருள்கள்.

யாறுஉள் ளடங்குங் குளம்உள; வீறுசால்
மன்னர் விழையுங் குடிஉள; தொன்மரபின்
வேதம் உறுவன பாட்டுஉள; வேளாண்மை
வேள்வியோடு ஒப்ப உள.

யாறுகள் புகுந்தாலும் புறம்போகாது உள்ளடங்குங் குளங் களும் உள; சிறப்பு அமைந்த அரசரான் விரும்பப்படுங் குடிகளும் உள; பழைய மரபினையுடைய வேதங்களைப்போலும் பாட்டுக் களும் உள; யாகம்போலும் ஈகைகளும் உள. ருரு

51. 3 யாக்கைபாழ்ப்; 8 வரைகொள்ள; 12 வேந்தனைத் **52.** 9 ஓதற்; 10 பொருள்கள்; 14 பொருளே **53.** 1 ஆறுள்; 6 வினையும்

எருதுஉடையான் வேளாளன் ; ஏலாதான் பார்ப்பான் ;
ஒருதொடையான் வெல்வது கோழி ; உருவோடு
அறிவுஉடையாள் இல்வாழ்க்கைப் பெண்எனப ; சேனைச்
செறிவுஉடையான் சேனா பதி.

எருதுடையான் வேளாளன் ஆவான் ; ஓர்எற்றான் வெல்வதாயுள்ள கோழிபோல ஒருவரோடு ஒன்றும் மாறுபடாதான் பார்ப்பான் ஆவான் ; வடிவழகும் அறிவும் உடையாள் ஒருவற்கு இல்வாழ்க்கையுடைய பெண் ஆவாள் ; சேனையோடு மேவியிருப் போன் சேனாதிபதி ஆவான். ருச

யானை யுடையார் கதன்உவப்பர் ; மன்னர்
கடும்பரிமாக் காதலித்து ஊர்வர் ; கொடுங்குழை
நல்லாரை நல்லவர் நாண்உவப்பர் ; அல்லாரை
அல்லார் உவப்பது கேடு.

யானையுடையார் யானையினது சினத்தை உவப்பர்; அரசராயினார் கடிய செலவினையுடைய குதிரையைக் காதலித்து மேற்கொள்வர் ; கொடுங்குழையையுடைய நல்லாரை நல்லார் நாணால் உவப்பர் ; நாணுடையரல்லாத மகளிரை அறிவுடையரல்லாதார் உவந்தாற் கேடாம். ருரு

கண்ணில் சிறந்த உறுப்புஇல்லை ; கொண்டானில்
துன்னிய கேளிர் பிறர்இல்லை ; மக்களின்
ஒண்மையவாய் சான்ற பொருள்இல்லை ; ஈன்றாளின்
என்ன கடவுளும் இல்.

ஒருவற்குக் கண்போலச் சிறந்த உறுப்புப் பிறிதொன்று இல்லை ; தம்மைக் கொண்டானைப் போலச் செறிந்த கேளிர் மகளிர்க்கு இல்லை ; புதல்வரைப் போல நன்மைநெறி அமைந்த பொருள் இல்லை ; தன்னை யீன்றாள் போல்வதோர் [1]தெய்வம் எத் தெய்வத்துள்ளும் இல்லை. ருசா

54. 1 ஏருடையான் ; 3 இல்லாதான் ; 4 பார்ப்பானும், பார்ப்பானை; 5 ஒருடையான், நேருடைய ; 5-7 விருதுடையான் வெல்ப கொளீஇ ; 11 பெண் என்பாள் (ரி) ; 12 சேனை 55. 8 கொடுங்குழைய ; 11 நாணுவப்ப(ரி) 56. 4 - 12 கல்வியின், நுண்ணிய வாய பொருளில்லை கொண்டானில் துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளில் ; 9 ஒண்மையவாய்ச் ; 9-10 ஒண்மையவாய ; 12 ஈன்றாளோடு; 13 எண்ணக்(ரி). 1 கடவுளும்.

கற்றன்னர் கற்றோரைக் காதலர்; கண்ணோடார்
செற்றன்னர்; செற்றோரைச் சேர்ந்தவர் தெற்றென
உற்றது உரையாதார்; உள்கரந்து பாம்புஉறையும்
புற்றன்னர் புல்லறிவி னோர்.

கற்றாரனையர் அக் கற்றோரைக் காதலிப்பவர்; ஓர் உயிர்க்கும் கண்ணோட்டம் இல்லார் இடும்பைசெய்வாரோடு ஒப்பர்; அவரைச் சேர்ந்தொழுகுவார் தெளியத் தம் நட்டார்க்கு உறுதியாயின உரையாதார்; உள்கரந்து பாம்பு உறையும் புற்றே அனையர் புல்லறிவினோர். ருஎ

மாண்டவர் மாண்ட வினைபெறுப; வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே; யாண்டும்
பிறப்பால் பிறப்பார் அறன்இன் புறுவர்;
துறப்பார் துறக்கத் தவர்.

அறிவான் மாட்சிமைப்பட்டார் மாட்சிமைப்பட்ட செயல்களைப் பெறுவர்; அம் மாட்சிமையை வேண்டாதார் தமக்கு விருப்பமில்லாத வினைப்பயன்களையும் பெறுவர்; எக்காலத்தும் மக்கட்பிறப்பில் பிறப்பாரெல்லாரும் அறத்தையே விரும்புவார்; துறக்கத்தையே வேண்டுவார் துறப்பார்கள். ருஅ

என்றும் உளவாகும் நாளும் இருசுடரும்;
என்றும் பிணியும் தொழில்ஒக்கும்; என்றும்
கொடுப்பாரும் கொள்வாரும் அன்னர்; பிறப்பாரும்
சாவாரும் என்றும் உளர்.

எக்காலத்தும் இடையறாது உளவாம் நாண்மீன்களும் இருசுடரும்; 'எந்த நாள்களும் பிணிவருநாள்களும் உழவு முதலான தொழில்களும் எல்லாம் ஒக்கும்; எக்காலத்தும் கொடுப்பாரும் கொள்வாரும் உளர்; பிறப்பாரும் சாவாரும் எக்காலத்தும் உளராவர். எனவே உலகினது இடையறாமை உணர்த்தியவாறு.

57. 3 காதலிப்பார்; 4 கண்ணுடாச், கண்ணோடாச்; 8 தெற்றனர், தேற்றென்ன, தெற்றன,; **58.** 9 பிறப்பார்; 9-12 பிறப்பார்துயரி லின்புறுவரென்றும் **59.** 6-7 இனிய தொழிலோர்க்கும். 1 இந்த, எந்தெந்த, இறந்த.

இனிதுஉண்பான் என்பான் உயிர்கொல்லாது உண்பான்;
முனிதக்கான் என்பான் முகன்ஒழிந்து வாழ்வான்;
தனியன் எனப்படுவான் செய்தநன்று இல்லான்;
இனியன் எனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா ஒழுக்கத் தவன்.

இனிதாக உண்பான் என்று சொல்லப்படுவான் ஓர் உயிரை யும் கொல்லாதே உண்பான்; எல்லாரானும் வெறுக்கத்தக்கான் என்பான் முகந்திரிந்து வாழ்வான்; துணையில்லான் என்று சொல்லப்படுவான் தான்செய்ததொரு நல்வினை இல்லாதான்; எல்லார்க்கும் இனியன் எனப்படுவான் யாவர்யாவர்க்கே யாயி னும் வெறுக்கத்தகாத செய்கையை யுடையான். சுo

